அசல் வழக்கு எண். 203/2017 வா.சா.1 திருநீலகண்டன் த/பெ நடராசன்

**<u>05.11.2024 குறுக்கு விசாரணை</u>**

1. நான் தவிடு வியாபாரம் மற்றும் தவிடு எண்ணெய் வியாபாரம் செய்து வந்தேன். தற்போது வியாபாரம் எதுவும் செய்யவில்லை. வியாபாரத்தை நிறுத்தி 4 வருடங்கள் ஆகிறது. நான் தவிடு வியாபாரத்தை தவிர்த்து வேறு வியாபாரம் ஏதாவது செய்தேனா என்றால் வியாபாரம் செய்யவில்லை. ஆனால் தெரிந்த நபர்கள் பணம் கேட்டால் வட்டிக்கு கொடுப்பேன்.

2. பிரதிவாதி எனக்கு 15 வருடங்களாக பழக்கம். எவ்வாறு பழக்கம் என்றால் நான் வீடு கட்டும் போது பிரதிவாதியின் அப்பா தான் எனக்கு கட்டுமான பொருட்கள் கொடுத்தார். அதன் மூலம் எனக்கு பிரதிவாதி பழக்கம் ஆனார்.

3. பிரதிவாதிக்கு அவருடைய அப்பா எழுதி வைத்த தானசெட்டில்மென்ட் பத்திரத்தின்படி வந்த சொத்தினை எனக்கு 10.01.2007 அன்று ரூ.13,00,000/-த்திற்கு காலி மனை அருதி விக்கிரய ஒப்பந்தம் போட்டுகொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் அந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை. அதன்பிறகு 11.12.2009 அன்று தேதியில் வா.சா.ஆ.1 அடமானப்பத்திரம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான்.

4. நான் அரிசி மண்டி ஏதாவது வைத்திருந்தேனா என்றால் என்.திருநீலகண்டன் ரைஸ் பிராண்ட் மெர்ச்சண்ட் என்ற பெயரில் அரிசி மண்டி வைத்திருந்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்.திருநீலகண்டன் ரைஸ்பிராண்ட் மெர்ச்சன்ட் என்றபெயரில் உள்ள லெட்டர் பேடில் என்னால் எழுதப்பட்ட கணக்கு வழக்கு மற்றும் கையெழுத்துஎன்று சொன்னால் லெட்டர் பேட் என்னுடையது தான். ஆனால் அதில் உள்ள கணக்கு வழக்குகள் நான் எழுத வில்லை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

5. அவ்வாறு என்னிடம் காட்டப்பட்ட லெட்டர் பேடில் உள்ள கணக்கு வழக்கின்படி 10.01.2007 அன்று பற்று ரூ.3,00,000/- என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்த தொகை நான் பிரதிவாதியுடன் 10.01.2007 தேதியிட்ட கிரய ஒப்பந்தம் போடும்போது கொடுக்கப்பட்ட முன் தொகை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்பட்ட முன் தொகை ரூ.3,00,000/-த் திற்கு நான் 6 காசோலைகளாக தலா ரூ.50,000/-திற்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரிதான். அவ்வாறு கொடுக்கப்பட்ட 6 காசோலைகளும் பிரதிவாதியால் வங்கியில் வசூலுக்கு போடப்பட்டு பணம் பிரதிவாதிக்கு சேர்ந்துவிட்டது என்றால் சரிதான்.

6. மேலும் அதே ஆவணத்தில் 10.01.2007 முதல் 10.01.2009 வரை 24 மாத வட்டிஎன்று ரூ.1,08,000/- குறிப்பிடப்பட்டு அதன்கீழே பற்று ஒருமாத வட்டி ரூ.4500/- சேலை கொடுத்த வகையில் ரூ.25,000/- மொத்தம் ரூ.29,500/- மற்றும் 21.01.2009 பற்று ரூ.78,500/- ஆக மொத்தம் ரூ.1,08,000/- என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் எழுதப்பட்டுள்ளது உண்மைதான். ஆனால் அந்த தொகை எவ்வாறு எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தில் முன் பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முன் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய கையெழுத்தும், அதே ஆவணத்தில் பின் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் அடங்கிய கையெழுத்தும் ஒரே கையெழுத்தா என்றால் ஒரே கையெழுத்து தான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் பின் புறத்தில் முன் பக்கப்படி அசல் ரூ,3,00,000/- என்றும், 11.01.2009 முதல் 10.12.2009 வரை 11 மாத வட்டி ரூ.49500/- வரவு வகை ரூ.500/- ஆக மொத்தம் ரூ.3,50,000/- என்றும் 11.12.2009 அன்று அடமான கடன் பத்திரம் பதிவு எண்.9811/2009

படி அடமான பத்திரம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு எழுதப்பட்ட விவரங்கள் என்பார்வைக்கு வரவில்லை. வந்திருந்தால் நான் அந்தஆவணத்தில் முன் பக்கத்தில் கையெழுத்து செய்தது போல் பின் பக்கத்திலும் கையெழுத்து செய்திருப்பேன்.

8. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் பின் புறத்தில் சாட்சிகள் கே.சீனிவாசன் த/பெ ஜி.கண்ணப்ப முதலியார் 1098பி மில்லர்ஸ் ரோடு ஆரணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி 11.12.2009 அன்று ரூ.3,50,000/-த்திற்கு வா.சா.ஆ.1 அடமான கடன் பத்திரம் எழுதப்பட்டது உண்மை என்றால் சரிதான்.

9. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் வாசகங்கள் அனைத்தும் நான் சொல்லி தான் எழுதப்பட்டவை என்றும் அவ்வாறு எழுதப்பட்டு நான் கையெழுத்திட்டு அதன் அடிப்படையில் தான் வா.சா.ஆ.1 அடமானபத்திரம் எழுதப்பட்டது என்றும் ஆனால் அவ்வாறு பி.வா.சா.ஆ.1 ன்படி தான் வா.சா.ஆ.1 அடமான பத்திரம் எழுதப்பட்டதாக ஒப்பு கொண்டு அதற்கு முரணாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் பின் பக்கத்தில் உள்ள கணக்கு விவரங்கள் பற்றி என் பார்வைக்கு வரவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10. 10.01.2007 தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்த பத்திரத்தின்படி பிரதிவாதியின் மீது நான் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.01.2007 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்த பத்திரம் காலாவதி ஆகிவிட்டது என்றும் அந்த காரணத்தினால் அந்த ஆவணத்தின்படி ஏற்படுத்தப்பட்ட வில்லங்கமும் காலாவதி ஆகிவிட்டது என்று சொன்னால் சரியல்ல.

11. 10.01.2007 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தின்படி ரூ.3,00,000/- வட்டிக்காக தான் பிரதிவாதியிடம் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல.

( வா.சா.1ன் உடல்நிலை கருதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)